**கடுவன பிரதேச சபை - 2024**
---------------------------------------------
**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடுவன பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கடுவன பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூபா 243,773 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திருத்த வேலை மற்றும் பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 429,020 தொகைக்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகளை இனங்கண்டு சரியான முறையில் செயற்படுவது என. | மூலதனச் செலவுகள் மற்றும் மீண்டுவரும் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மித்தெனிய ராஜபக்ஷ சிறப்பு வர்த்தக தொடர் கட்டிடம் தொடர்பாக 2017 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை அபிவிருத்தி வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தொகை ரூபா 3.88 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அபிவிருத்தி அலுவல்கள் முடிவடைந்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்தத் தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலை என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1.53 மில்லியன் குறைவாக மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3.98 மில்லியன் மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முத்திரைக் கட்டண வருமானம் சரியான பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | நீர் செயற்திட்டமொன்றுக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 613,960 இற்கான நுகர்வுப் பொருட்கள் மூலதனச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகளை இனங்கண்டு சரியான முறையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனச் செலவுகள் மற்றும் மீண்டுவரும் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | நூலக சேர்புப் பதிவேட்டின் படி நூலகப் புத்தகங்கள் மீதி ரூபா 5,520,678 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,230,274 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 709,596 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மற்றும் கிரயம் மற்றும் தேர்வுப் பதிவேட்டில் வித்தியாசத்தை இனங்கண்டு 2025 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப்பதிவேடு / அட்டவணைகளில் காட்டபட்டுள்ள மீதிகளிடையே ரூபா 456,517 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | குறிப்பிட்ட மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்கு அல்லது அட்டவணைகளை சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுப்பெறுமதி ரூபா 65.04 மில்லியன் தொகைக்கான இரண்டு கணக்கு விடயங்கள் தொடர்பாக விரிவான அட்டவணைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் திருப்திகரமான பரிசோதனைகள் மேற்கொள்ள முடியவில்லை. | எதிர் காலத்தில் பதிவேட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய விரிவான அட்டவணைகள் நாட்குறிப்பு சீராக்கலுக்குரிய கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 1.75 மில்லியன் தொகைக்கான 80 பலவின வைப்புக்கள், நிர்மாண வேலை பாதுகாப்பு பிணை வைப்பு, டென்டர் பிணை வைப்புகளுக்கு 80 மீதிகளை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடிதத்தின் மூலம் அறிவித்து எதிர் காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 02 வருடங்களை மிகைத்துள்ள பிணை வைப்புகள் தொடர்பாக ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 04 | கடையறைகளை வாடகைக்கு கொடுத்த தினத்தில் அல்லது 06 மாதங்களுக்குள் உச்ச மட்ட 06 தவணைகளில் ஒரே தடவையில் பெறும் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மற்றும் 2024 ஆண்டுகளுக்குரிய வாடகைக்கு கொடுத்திருந்த 06 கடையறைகளிலிருந்து ரூபா 1.51 மில்லியன் அறவீடு செய்ய | நடவடிக்கை எடுப்பதற்கான அலுவல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்கு அல்லது உடன்படிக்கை மீறிய காரணத்தினால் ஆதனங்களை |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 31.66 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19.36 மில்லியன் தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,116,668 | 6,024,065 | 4,206,608 | 1,821,487 | 1,709,250 | 1,573,980 | 1,580,510 | 4,030 |
| வாடகை | 17,847,000 | 18,838,338 | 18,811,742 | 1,956,584 | 17,865,200 | 14,760,888 | 14,931,798 | 1,929,988 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,257,800 | 2,918,948 | 2,594,868 | 424,380 | 1,524,150 | 2,224,937 | 2,346,137 | 100,300 |
| ஏனைய வருமானங்கள் | 44,106,280 | 46,577,413 | 48,113,824 | 13,959,605 | 37,304,780 | 43,882,269 | 41,702,007 | 15,496,017 |
| மொத்தம் | 69,327,748 | 74,358,764 | 73,727,042 | 18,162,056 | 58,403,380 | 62,442,074 | 60,560,452 | 17,530,335 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 41 கடைகளில் இருந்து கடை வாடகை ரூபா 815,273 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 273,144 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய வாடகை ரூபா 925,301 தொகை மற்றும் டென்டர் ஆதனங்களின் மூலம் பெற வேண்டிய ரூபா 90,750 தொகை மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 55,559 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | வாகன வாடகையில் ரூபா 128,897 தொகை அறவிடப்பட்டதுடன், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், டென்டர் ஆதனங்களின் வாடகையை அறவீடு செய்தவற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு முறையான செய்முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கடுவன பிரதேச சபைக்கு உரித்தான மித்தெனிய ராஜபக்ஷ சிறப்பு வர்த்தக தொடர் கட்டிடத்தின் இலக்கம் 21 முதல் 25 வரையான கடையறைகள் மற்றும் இரண்டாம் மாடியில் ஓய்வகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்வதற்காக 2017 ஒக்தோபர் 23 திகதி சபையுடன் அணுகியிருந்த உடன்படிக்கையின் படி 2014 ஆண்டின் கடை வாடகை பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் படி ரூபா 8.45 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தும் பணம் செலுத்துவதற்கும், ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 16.64 மில்லியன் செலவிடுவதற்கும் அந்த செலவிடப்படும் தொகை வாடகைத் தொகையிலிருந்து 30 வருடங்களுக்குள் மாதாந்த தவணை ரூபா 462,211 தொகை என எதிரீடு செய்வதற்கும் இணங்கியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை செலுத்துதல் மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்து வியாபார அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார அலுவல்களுக்காக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அவ்வாறின்றேல் மேற்கூறிய ஆதனத்தை மீண்டும் பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்கும் ஆதனங்களை அபிவிருத்தி செய்து வியாபார நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு அல்லது குறிப்பிட்ட ஆதனங்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகை மூலம் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 461,080 தொகை ஒன்று காணப்பட்டது. | ரூபா 314,500 தொகை அறவிடப்பட்டது எனவும், ரூபா 88,800 தொகை பதிவழிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பெற வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 13.23 மில்லியன் அறவீடு செய்திருக்காததுடன், அந்த மீதியில் ரூபா 10,000 மற்றும் ரூபா 100,000 தொகையை மிகைத்திருந்த நுகர்வோர் முறையே 199 தொகை மற்றும் இருவராக காணப்பட்டமையால் வருமானம் அறவீடு செய்வதில் திருப்திகரமான மட்டமொன்றில் காணப்படுவில்லை. | ரூபா 622,522 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 10,000 இற்கு மிகையான நீர்க் கட்டணம் 59 நுகர்வோரிடம் முழுத் தொகையும் அறவிடப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் மற்றம் முத்திரைக் கட்டனம் முறையே ரூபா 2.86 மில்லியன் தொகை மற்றும் ரூபா 34.32 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1.3 மில்லியன் தொகை மற்றும் ரூபா 19.29 மில்லியன் தொகை கிடைத்திருந்தது என. | பிரதான செயலாளர், ஆளுனர் மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையாக அபிவிருத்தித் திட்டமொன்றின்றிய 09 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 49 மற்றும் 52 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் அல்லது 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் | எதிர் காலத்தில் அந்த அபிவிருத்தித் திட்டங்களை முறைப் பிரகாரம் அங்கீகரிப்பதற்கும் அதற்கான கட்டணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

01 பகுதியில் அட்டவணை 02 இன் பிரகாரம் அந்த நிர்மாண வேலைக்குரிய ரூபா 578,364 தொகை கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பெறுமதி ரூபா 12.56 மில்லியனிற்கான 18 ஏக்கர் 0.084 பர்சஸ் இற்கான 16 காணிகள் மற்றும் 05 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்ட போதிலும், அதன் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான 03 ஏக்கர் 33.19 பர்சஸ் தொகைக்கான 03 காணிகள் மற்றும் பெறுமதி ரூபா 36.34 மில்லியனிற்கான கிரம கடையறைகளுடனான பஸ் நிலையக் கட்டிடத்தில் மேல் மாடியை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் வாடகைக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்காமையால் அந்த சொத்துக்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | எதிர் காலத்தில் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருமானம் உழைக்கப்பட வேண்டும். |
| (இ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொறியியலாளர் (கட்டிடம்) அலுவலகத்தினால் கடுவன பிரதேச சபைக்கு உரித்தாக்கியிருந்த கிரம நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 2140 சதுரஅடி அளவான மற்றும் ரூபா 4.25 மில்லியன் தொகை பெறுமதியான கடையறை தொடர் கட்டிடத்தில், மேல் மாடியின் நிர்மாண வேலைகள் மேற்கொண்டிருக்காமையால் குறிப்பிட்ட கட்டிடம் அழிவடையக்கூடிய நிலைமையில் காணப்பட்டது. | குறிப்பிட்ட விடயங்களுக்காக நிதியும் காணப்படவில்லை என. | சொத்துக்களை பாதுகாப்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான வாகனமொன்றை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கும் மற்றும் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை | திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், 04 வாகனங்கள் எதிர் காலத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பயன்படுத்தக்கூடிய வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கும் முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| எடுத்திருக்கவில்லை. | | வேண்டியதுடன், ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருநத சபைக்கு சொந்தமான 04 வாகனங்களையும் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 28.55 மில்லியன் தொகைக்கான 04 அபிவிருத்தித் திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. | ஒரு செயற்திட்டம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் மற்றுமோர் செயற்திட்டம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 02 செயற்திட்டங்கள் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் 02 பதவிகளுக்குரிய 23 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான அலுவல்கள் மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | சபையின் பதவியணி தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2002 ஜனவரி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை 22 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நீர் உதவியாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல், உத்தியோகத்தர் இருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளமாக கூட்டுத்தொகை ரூபா 13.98 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | பதவி அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என. | சபையின் பதவியணி தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி முறைப் பிரகாரம் இடமாற்றக் கொள்கையொன்று செயற்படுத்தாமையால் சபையில் கடமையாற்றுகின்ற பதவியணிகளிடையே 10 உத்தியோகத்தர்கள் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலப் பகுதியில் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றப்பட்டு வருகின்றது. | தற்போது 05 வருடங்களுக்கு மிகையான அனைவரையும் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றக் கொள்கை செயற்படுத்தப்பட வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடச் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் 03 ஆம் இலக்க நிபந்தனையின் படி மித்தெனிய ஹெல்லல கலகாவஹேன எனும் காணியில் அமைந்துள்ள திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் காணப்படுகின்ற பிளாஸ்டிக், பொலித்தீன், கடதாசி, கண்ணாடி மற்றும் இரும்பு வெவ்வேறாக தெரிவு செய்து மீள்சுழற்சிக்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், அவ்வாறு அனுப்பப்படும் வரை பொருத்தமான இடமொன்றில் காற்றினால் அடித்துச் செல்லப்படாதவாறு மற்றும் மழை நீரினால் மூடப்படாத முறைப் பிரகாரம் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | குப்பைகள் பிரிக்கப்பட்டு முறைப் பிரகாரம் களஞ்சியப்படுத்தப்பட்டு மீள்சுழற்சிக்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது என. | அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 03 இன் படி திண்மக் கழிவுப் பொருட்கள் தெரிவு செய்யப்பட்டு அதை முறைப் பிரகாரம் களஞ்சியப்படுத்துதல் மற்றும் மீள்சுழற்சிக்காக உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். |